சென்னை வடக்கு மாவட்ட பெரம்பூர் வடக்கு பகுதி 34 (அ) வட்ட திமுக சார்பில் வட்ட செயலாளர் நீ. கார்த்திபன் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., வழக்கறிஞர் ஏ.சரவணன், பகுதிச் செயலாளர் அ.முருகன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், ஏ.தமிழ்ச்செல்வன், ப.மதிவாணன், க.சர்மிளாகாந்தி எம்.சி., ஏ.ஜியா, எம்.லதா, ஏ.செந்தூர்பாண்டியன், எச்.ராஜ்குமார், 34 (அ) வட்டத்திற்க்குட்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தே.கல்லுப்பட்டி முரசொலி முகவர்

ரா.வீமராஜ் இல்ல மணவிழா!

கழகத்தினர் வாழ்த்து!

மதுரை, செப். 5- தே.கல்லுப்பட்டி முரசொலி முகவர் ரா.வீமராஜ் - வீ.முத்துமணி இவர்களது புதல்வர் வி.கௌதம், ஜெ.செல்லத்துரை - சி. கவிதா ஆகியோரது புதல்வி திருநிறைச் செல்வி சி.சிவசங்கரி இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நாளை (6.9.2024 - வெள்ளிக் கிழமை) மதுரை திருப்பரங்குன்றம் ஸ்ரீசுப்பிரமணிய சாமி திருக்கோவிலிலும் மற்ற வைபவங்கள் காலை 8.01க்கு மணிக்குமேல் தே. கல்லுப்பட்டி அக்ரஹாரம் வீதியில் அமைந்துள்ள கம்மவர் திருமண மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவில் ஆன்றோர்கள், சான்றோர்கள், கழக நிர்வாகி கள் அனைவரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77இல் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கே.பி பார்க் குடியிருப்பில் நடைபெற்ற தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு அட்டை வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, மருத்துவக் காப்பீடு அட்டைகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.

தென்காசி மாவட்டத்தில்

பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் திட்டப் பணிகள்!

சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவர் எஸ். காந்திராஜன் தலைமையில் குழு உறுப்பினர்கள் நேரில் ஆய்வு!

தென்காசி,செப்.5- தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் திட்ட பணிகளை சட்டபேரவை மதிப்பிட்டுக் குழு தலைவர் எஸ்.காந்திராஜன்(வேடசந்தூர்) தலைமையில் குழு உறுப்பினர்கள் அம்பேத்குமார் (வந்த வாசி) கருமாணிக்கம் (திருவாடானை) சதன் திருமலைகுமார்(வாசுதேவநல்லூர்) மா.சின்னத்துரை(கந்தர்வகோட்டை) ராமச்சந்திரன்(சேவூர்) பன்னீர்செல்வம் (சீர்காழி) பாலாஜி (திருப்போரூர்)ஓ.எஸ்.மணியன் (வேதாரண்யம்)ஈ.ராஜா (சங்கரன்கோயில்)வெங்கடேஸ்வரன் (தர்மபுரி) மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வை விட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை அலுவலர்களுடான ஆய்வுக்கூட்டம் சட்டபேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் எஸ்.காந்திராஜன் (வேடசந்தூர்) தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலையில் நடை பெற்றது.

அதன் பின்னர் சட்ட பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் எஸ்.காந்திராஜன் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் வேளாண் மற்றும் உழவர் நலன்,கால்நடை பராமரிப்பு,பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலன், கூட்டுறவு, நெடுஞ்சாலைகள், சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்,இந்து சமய அறநிலையங்கள், வனம் இயற்கை வளங்கள் ஆகிய அரசுத்துறைகளின் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் திட்டத்தின் காலவரம்பு அதன் பயன் இத்திட்டத்தின் செயல்முறை வளர்ச்சி மற்றும் தற்போதைய நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கூட்டுறவுத் துறையின் மூலம் 58 மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு ரூ.4.48 கோடி மதிப்பிலான கடனுதவிகளையும்,12 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3.10 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும்,204 பயனாளிகளுக்கு ரூ.2.02 கோடி மதிப்பிலான கடனுதவிகளையும்,1 பயனாளிக்கு ரூ.40 ஆயிரம் மதிப்பிலான கைம்பெண் கடனுதவியினையும், ஒரு பயனாளிக்கு கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணையினையும், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தின் மூலம் ரூ.2.20 கோடி மதிப்பில் 16 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் 14 பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் மாவட்ட வன அலுவலர் இரா.முருகன், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் வீ.ஆர். சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சி.கிருஷ்ண முரளி,

முதன்மைச் செயலாளர் முனைவர் கீ.சீனி வாசன், கூடுதல் செயலாளர் பாலசுப்பிரமணியம், துணைச் செயலாளர் சு.பாலகிருஷ்ணன் வருவாய் கோட்டாட்சியர்கள் லாவண்யா(தென்காசி) கவிதா (சங்கரன்கோவில்) நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி,ஒன்றிய குழு தலைவர்கள் பொன்.முத்தையா பாண்டியன்,லாலா சங்கர பாண்டியன்,நகராட்சி ஆணையாளர் கள் சபாநாயகம்,சுமா,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கந்தசாமி, கருப்பசாமி,மல்லிகா நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் உலகம்மாள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை! - இன்று

அம்பத்தூர் கிழக்குப் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் வேண்டுகோள்!

சென்னை செப் 4 - சென்னைகிழக்குமாவட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பொதுஉறுப்பினர்கள்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை சென்னை பெருநகரவளர்ச்சிகுழுமம் அமைச்சர் (ம) சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார் என பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

அம்பத்தூர்கிழக்குபகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர்எம்.டி.ஆர்.நாகராஜ் தலைமையில் இன்று (5.09.2024-வியாழக்கிழமை) இரவு 7.00 மணியளவில் சென்னை கிழக்கு மாவட்டம் வார்டு 83அ முருகன் கோயில் தெரு விவேகானந்தா நகர் மீனா மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் இந்து சமயஅறநிலையத்துறை(ம) சென்னை பெருநகர வளர்ச்சிகுழுமம்அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபுபங்கேற்று ஆலோசனைகள் வழங்குகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் பி.டி.சி.செல்வராஜ்(மாநில தொழிற்சங்க தலைவர்) ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., (வடக்குபகுதிசெயலாளர்) பி.கே.மூர்த்தி (செயற்குழு உறுப்பினர் 7வது மண்டலகுழு தலைவர்) கலந்து கொள்கிறார்கள்.

எனவே இக்கூட்டத்தில் அம்பத்தூர் கிழக்கு பகுதிக்குஉட்பட்டபகுதிகழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மற்றும் பொதுக் குழுஉறுப்பினர்கள்,வட்ட கழகசெயலாளர்கள்,நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள்,மாவட்டபகுதி,வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,பி.எல்.ஏ.2,உறுப்பினர்கள்மற்றும்கழகமுன்னாள் நிர்வாகிகள் கழக தோழர்கள்அனைவரும்பெருந்திரளாககலந்துகொண்டுசிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எம்.டி.ஆர். நாகராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாவட்டச் செயலாளர்க.சுந்தர் எம்.எல்.ஏ.சிறப்புரை!க.செல்வம் எம்.பி.பங்கேற்பு!

மதுராந்தகம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

ஒன்றிய செயலாளர் பொன்.சிவக்குமார் அறிக்கை!

காஞ்சிபுரம்,செப்.,5 காஞ்சிபுரம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் 11.9.2024 புதன்கிழமை அன்று காலை 10 மணிக்கு பெருவெளி கூட்ரோட்டி.ல் அமைந்துள்ள டிபி.ஜி. திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் நான் (ஒன்றிய செயலாளர் பொன். சிவகுமார்) அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறேன்.

ஒன்றிய அவைத்தலைவர் கே.சசிகுமார் தலைமை வகிக்கிறார்.

ஆர்.வெங்கடேசன், பொன்.சக்கரபாணி,ஏ.ஜி.ஆர்.சுமித்ராதேவி,து.குமார், ரோக்சகாயராஜ்,வி.தனபால், பத்மாசெல்வராஜ்,மு.ச.டில்லிபாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில்லமாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் க.செல்வம் எம்பி., எண்டத்தூர் வி. ஸ்ரீதர், செம்பருத்தி துர்கேஷ், பி.ராஜாராமகிருஷ்ணன், ஜி.எஸ்.தினகரன், சசிரேகா, ஜெ.ஜெய்சங்கர், வி.தணிகைஅரசு,ஜெ.அரசு, பி.இளங்கோவன், எஸ்.ஸ்டீபன் சவரி, இ.சங்கர்,வி.ஜெயந்திவாசுதேவன்,ஆறுமுகம், இம்பாரதி, பி.ராஜன்பாபு, டாக்டர் எஸ்.சிவா, சுஜாதா ஜெய்சங்கர், பிரியா சக்கரபாணி, லதா மனோகரன், செல்லம்மாள் ஜெயராமன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

ஜி.டி.எம்.தெய்வசிகாமணி நன்றி கூறுகிறார்.

திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில்

செஞ்சி ஊராட்சி மன்ற தலைவர் இரா.அறிவழகி ராஜீ இல்ல மண விழா!

அமைச்சர் ஆர்.காந்தி மணமக்களை வாழ்த்துகிறார்!

ஆவடி சா.மு.நாசர்- ஆ.கிருஷ்ணசாமி- கோவி செழியன் பங்கேற்பு!

திருவள்ளூர், செப்.05- திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முன்னாள் விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செஞ்சி டி.ராஜு செஞ்சி ஊராட்சி மன்ற தலைவர் அறிவழகி ராஜு அவர்களின் இல்ல திருமண விழா நாளை (06-09-2024 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் திருவள்ளூர் ஆயில் மில் அருகிலுள்ள எம்.எஸ். கே திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ., தலைமை வகிக்கிறார். திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் விஜி.ராஜேந்திரன் முன்னிலை வகிக்கிறார். மாவட்ட அவை தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய கழகச் செயலாளர் கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

இந் திருமண விழாவில் கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்துகொண்டு மணமக்கள் இரா.மணிமேகலை - பி.பிரேம்குமார் ஆகியோரை வாழ்த்துகிறார்.

இதில் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, அரசு தலைமை கொறடா கோவி செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆர்.டி.சேகர், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் இ.ஏ.பி. சிவாஜி, திருத்தணி எம்.பூபதி, ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், வி.சி.ஆர்.குமாரன், சி.ஜெயபாரதி, உதயமலர் பாண்டியன், எம்.மீதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், கிஷோர், மு. சுப்பிரமணியம் ராஜேஸ்வரி ரவீந்திரநாத்,

கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, டி.தேசிங்கு, சரஸ்வதி சந்திரசேகரன், ஒன்றிய நகர கழகச் செயலாளர்கள் சி.சு. ரவிச்சந்திரன், கிறிஸ்டி, எஸ்.மகாலிங்கம், எம். ராஜேந்திரன், டி.கே.சந்திர சேகர், எம்.ஜான் (எ) பொன்னுசாமி, ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், சே.பிரேம் ஆனந்த், ந.வேணு, த.எத்திராஜ் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

ரஞ்சன், ஜி.பிரகாஷ், ரூபேந்தர் அருள்ராஜ், பி.பிரகாஷ், பிரவீன் ராஜ் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

ஜெ.பாஸ்கர் தலைமை ! பாரதி அண்ணாவேலன் எம்.சி. முன்னிலை

மதுரவாயல் 152வது வட்டக் கழக பொது நிர்வாகிகள் கூட்டம்!

காரம் பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ - பாலவாக்கம் மு.மனோகரன் சிறப்புரை!

சென்னை, செப்.5- முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக பொருளாரும் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்களின் ஆலோசனைபடியும் சென்னை தெற்கு மாவட்டக்கழக செயளாலருமான மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரணியன் வழிகாட்டுதலுடன் சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 152வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் வளசரவாக்கம், பார்வதி மஹாலில் பகுதி துணை செயலாளரும் மாமன்ற உறுப்பினர் ச.பாரதி அண்ணா வேலவன் எம்சி, ஏற்பாட்டிலிலும் முன்னிலையில் வட்டக்கழக அவைத்தலைவர் ஜெ.பாஸ்கரன் தலைமையிலும் வட்டக்கழக துணைச்செயலாளர் எஸ்.பி.ஜி.பிரபு வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில் மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, மாவட்ட துணைச் செயலாளரும் - வட்ட கூட்ட ஒருங்கிணைப்பாளருமான பாலவாக்கம் மு. மனோகரன் ஆகியோர் கழக ஆக்கப்பணிகள் மற்றும் முப்பெரும் விழா சம்மந்தமாக விளக்கி உரையாற்றினார்கள்.

அதுபோது கூட்டத்தில் மதுரவாயல் தொகுதி பொறுப்பாளரும் மாநில தொண்டரணி செயலாளரும் மாஸ்டர் பெ.சேகர், தலைமை பொதுக் குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார்,எம்.சி, மாவட்ட அமைப்பாளர் வி.ராஜேஷ், அ.விஜயா பாலா, முன்னாள் போரூர் பேரூராட்சி தலைவர் ச. அருணாசலம்,பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்..செல்வராஜ்,வே. மதியழகன், இரா. பால்பாண்டியன்,கே.ராஜி எம்.சி, வட்ட செயலாளர்கள் அ.செல்வம்,மாவட்ட இ. அ. து. அமைப்பாளர்கள் ச.சங்கர்கணேஷ் எம்.சி, செ.ரவி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் சி.நல்லதம்பி வி.திலகவதி, கு.சரவணன் பி.கே.சண்முகம், மாவட்ட பிரதிநிதி கே.. நாராயணன், வட்டக்கழக துணை செயலாளர் ஆர். கோதண்டம் கே.பாண்டீஸ்வரி, வட்டக்கழக பொருளார் ஜீ.ஜான்பீட்டர் பகுதி அமைப்பாளர் மகேஷ் துணை அமைப்பாளர்கள் டி.ராஜேஷ், பி.எம்.கே. பிரபா பகுதி பிரதிநிதிகள் ஆர்.வி.கே தமிழ்மாறன் து.சத்தியசீலன்,வ.அற்புதநாதன்,

முன்னாள் பகுதி பிரதிநிதி இ.அண்ணாவேலவன் மற்றும் கார்த்திகேயன் அ. சூர்யா கு.விஜயகுமார் ராஜ்குமார் அ.சதிஷ் சரவணன் ம.கிரி ரா.கார்த்திக் ராமசந்திரன்,வி.கோபி, வட்டக்கழக இளைஞரணி மாணவரணி மகளிரணி உறுப்பினர்கள் பாக முகவர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீர்கள் மற்றும் பாக நிலை உறுப்பினர்கள் கூட்டத்தில் திரளாக கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்தனர்.

86-வது வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் எம்.கமல் வேண்டுகோள்!

சென்னை, செப். 5 - அம்பத்தூர் வடக்கு பகுதி 86 வது வட்ட கழகத்தின் சார்பாக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (5.9.2024) மாலை 5 மணிய ளிவில் மீனாட்சி மினி ஹால் கலைவாணர் நகர் அத்திப்பட்டில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அம்பத்தூர் சட்டமன்றம் உறுப்பினர் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல், 7-வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்திற்கு 86 வது வட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பகுதி துணை அமைப்பாளர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் பாக முகவர்கள் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு 86 வது வட்ட கழக செயலாளர் எம்.கமல் எம்.சி. கேட்டுக்கொண்டுள்ளார்.

மா.நாகராஜன் தலைமை ! இரா.லட்சுமணன் முன்னிலை !

40(அ) வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

ஆர்.டி.சேகர், கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர், நந்தனம் நம்பிராஜன் பங்கேற்பு !

சென்னை, செப்:5 சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40(அ) வட்ட திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (5.09.2024 - வியாழக் கிழமை) மாலை 5.00 மணியளவில் எஸ்.எஸ்.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் மா.நாகராஜன் தலைமை வகிக்கிறார். பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலை வகிக்கிறார்.

இந்து.ஜி.ராஜேந்திரன், பி.பத்து, பி.மாலதி, மு. ஆனந்தன், அ.பிரான்சிஸ் சேவியர், இரா.பாஸ்கர், சி.ஜெ.மோகன், வி.ராஜசேகர், டி.மணிமாறன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, நந்தனம் நம்பிராஜன், ஆர். வெற்றிவீரன், ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், குமாரி நாகராஜன் எம்.சி, கு.நற்குணம், த. தமிழ்கொடி, லைலேண்ட் மோகன், வானூர் கே.ராஜி, பி.ஜானகி, ஏ.மனோ, எம். கோவிந்தராஜ், கே.சீனிவாசன், அ.கில்பர்ட்,

கே.கலைவாணி, கு.பாஸ்கர், பி.சுதர்சன், எஸ்.எல். ஏழுமலை, வீ.ஜீவா, வி.நிர்மலாதேவி, பி.ஜெகதிஷ், எல்.சார்லஸ், ஜி.நிர்மலா, ஜி.தினேஷ்குமார், ஏ.விஜயகுமார், டி.சக்திவேல், ஏ. அனிதா, ஜெ.சீனிவாசன், எல்.பேட்ரீக், எஸ்.கிருஷ்ணவேணி, எம்;சரவணன் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

ஜி.பிரேம்குமார் நன்றி கூறுகிறார்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்ட செயல்வீரர்கள் கூட்டம் வட்ட கழகச் செயலாளர் சைதை மு.இராஜா தலைமையில், பகுதி கழகச் செயலாளரும், 13 வது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சென்னை பெருநகர மாநகராட்சி துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், தொகுதி பொறுப்பாளர் கோ.வி லெனின் ஆலோசனைகளை வழங்கினார்கள். உடன் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், மு.பாக்கியலட்சுமி, மாவட்ட பிரதிநிதிகள் என்.நந்தகோபால், சைதை எஸ்.ராதாகிருஷ்ணன், சைதை ஏ.மஜித் உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி, 98 (ஆ) வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் காஞ்சி செ.துரை தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதில் வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.